**செய்தி வெளியீடு எண் : 677** **நாள்: 27.04.2022**

இந்தியாவிற்கான அமெரிக்க தூதர், சென்னை (U.S. Consul General in Chennai) திருமதி. ஜூடித் ரவின் (Ms. Judith Ravin) அவர்கள், தமிழ்நாடு அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் மாண்புமிகு திருமதி. பி. கீதா ஜீவன் அவர்களை இன்று (27.04.2022) மரியாதை நிமித்தமாக சென்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்து உரையாடினார். அதுபோது தமிழ்நாடு அரசின் மகளிர் உரிமைகள் குறித்த திட்டங்கள், பெண்கள், குழந்தைகள், திருநங்கைகள், மூத்த குடிமக்கள் நலன்கள் மற்றும் சமூக நலத் திட்டங்கள் குறித்தும் விரிவாக கேட்டறிந்தார்.

இச்சந்திப்பின்போது சென்னை அமெரிக்க துணை தூதரகத்தின் அரசியல் / பொருளாதார தலைவர் திருமதி. விர்சா பெர்கின்ஸ் (Ms. Virsa Perkins) மற்றும் அரசியல் / பொருளாதார நிபுணர் திருமதி. கீதா கோபாலகிருஷ்ணன் ஆகியோர் இருந்தனர்.

மேலும், தமிழ்நாடு அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஷம்பு கல்லோலிக்கர், இ.ஆ.ப., மற்றும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை இயக்குநர் திருமதி. த. ரத்னா, இ.ஆ.ப., மற்றும் சமூகப் பாதுகாப்புத் துறை இயக்குநர் திருமதி. ச. வளர்மதி, இ.ஆ.ப., ஆகியோரும் உடனிருந்தனர்.

**இயக்குநர்,**
**சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in